திராவிடன்

K. TARASU

ஆசிரியர்: என். வி. நடராசன்.

கோவிந்தசாமி கொட்டிய முரசு!

C

சென்னை, மதுரை மாவட்டங்களில் இந்தி எதிர்ப்புப் போர் நடைபெற்று முடிந்தபிறகு மூன்ருவது களமாகச் செங்கற்பட்டு மாவட்டம் காஞ்சீபுரத்தில் இந்தி எதிர்ப்புப் போர் துவங்கியது.

தோழர் ஏ. கோவிந்தசாமி ஐவரணியினர் 19-1-64 அன்று காஞ்சியில் அரசியல் சட்டமொழிப் பிரிவிற்குத் தீ மூட்டினர்!

"இதோ! அரசியல் சட்ட மொழிப் பிரிவிற்குத் தீ மூட்டுகிறேன்; பாரீர்!" என்று கூறிக்கொண்டே தோழர் ஏ. கோவிந்தசாமி தீ பற்றவைத்ததும், எரிதணலுக்கு இரையாகத் தொடங்கியது அரசியல் சட்ட மொழிப் பிரிவு. அருகே நின்ற போலீஸ் அதிகாரி அதைப் பிடுங்கிக் கீழே போட்டார். உடனே ரிசர்வ் போலீஸ்காரர் ஒருவர் விரைந்து தன் பூட்ஸ் காலால் அதை மிதித்துத் தூள் தூளாக்கினர்.

இப்படி தீமூட்டியமைக்காக தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, வெ. சம்பந்தம், கம்பராசபுரம் இராசகோபால், மாதவரம் வேதாசலம், பை. இராமதாஸ் ஆகியோரும், எரிப்புப் போராட்டத்தை ஒட்டி தோழர்கள் செங்கல்பட்டு மாவட்டச் செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சி நகர தி. மு. க. செயலாளர் மார்க் பொதுக்குழு உறுப்பினர் சபாபதி ஆகியோரும் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

தலைமைக் கழகம் அறிவித்திருந்த எரிப்புப் போராட்டப் பட்டியலில் தோழர்கள் சி. வி. எம். அண்ணாமலை, மார்க், சபாபதி ஆகியோரின் பெயர் அறிவிக்கப்படாமை தெரிந்ததே. தோழர் சி. வி. எம். அண்ணாமலை முதலானோரின் பெயர்கள் மறியல் போராட்ட பட்டியலில் அறிவிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

கழகத்தின் ஆணைப்படி தொண்டை மண்டலத்தில்-பல்லவன் தலைநகரில் இந்தி எதிர்ப்புப் போரின் 3ம் முகாம் 19-1-64ல் தொடங்கியது. தொழிற் சங்கச் செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி காஞ்சி வெ. சம்பந்தம், காஞ்சி வட்ட தி. மு. க. செயலாளர் கம்பராசபுரம் இராஜகோபால், சைதை வட்ட தி. மு. க. துணைச்செயலாளர் மாதவரம் வேதாசலம், கீழ்க்கரணை தி. மு. க. அவைத் தலைவர் பை. ராமதாஸ் ஆகியோர் தலைமைக் கழக ஆணைப்படி சனவரி 19-ம் நாள் மாலை அரசியல் சட்ட மொழிப் பிரிவிற்கு தீ மூட்ட செங்கழுநீர் ஓடை தெரு சண்முகம் மன்றத்திலிருந்து புறப்பட்டனர். மக்கள் உற்சாக முழக்கங்களால் வாழ்த்தொலிக்க மறவர் படை புறப்பட்டது.



போலீஸ் படையும் பின் தொடர்ந்தது.

வழி நெடுக மக்கள் கூட்டம் கூட்டமாக வந்தனர். அவர்கள் ஊர்வலத்தைத் தொடராதவாறு போலீசாரால் தடுத்துத் தேக்கி வைக்கப்பட்டனர். மறியல் வீரர்கள் அந்தக் கூட்டங்களின் வாழ்த்துக்களை பெற்றுக்கொண்டே சென்றனர்.

சண்முகம் மன்றத்தை விட்டு எரிப்புப் போராட்ட வீரர்கள் நூறு அடி தொலைவு சென்றதும். போலீஸ் தர்பார் ஆரம்பமாகி விட்டது.

போராட்ட வீரர்களைக் காணத் திரண்டிருந்த மக்கள்மீது போலீஸ் பாய்ந்தது; தடியடிப் பிரயோகம் நடத்தியது. மக்கள் அதையும் தாங்கிக்,கொண்டு, "இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!" என்று கூறி ஐவரணியை வழியனுப்பினர். ஊர்வலம் தேரடித் தெரு நோக்கித் திரும்பியது. மக்கள் ஒலி முழக்கங்களால் ஐவரணியை வரவேற்றனர். போலீஸ் அங்கும் தடியைக் காட்டி மிரட்டியது.

அந்த வழியாக தண்ணீர்க் குடங்களை எடுத்துவந்த தாய்மார்களையும் போலீஸ் தடியால் அடித்து விரட்டியது.

வாழ்த்தொலி முழங்க ஓதியடி மேடையை ஐவரணி அடைந்தது.

தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, வெ. சம்பந்தம், இராசகோபால், வேதாசலம், இராமதாஸ் ஆகிய ஐவரும் மேடையேறி "ஆதிக்க இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!" என்று குரல் கொடுத்தனர் போலீஸ் மிரட்டலையும் மீறிக் கூடியிருந்த மக்களும் இந்தி எதிர்ப்பு முழக்கங்களை முழங்கினர்.

ஐந்து நிமிட நேரம் ஒலி முழக்கங்களை முழங்கியபின், முதலில் தோழர் ஏ. கோவிந்தசாமி முன் வந்தார். எதிரேநின்ற போலீசதிகாரியிடம் அரசியல் சட்ட மொழிப்பிரிவைக் காட்டினர்.

"இதோ! அரசியல் சட்ட மொழிப் பிரிவைக் கொளுத்துகிறேன்-பாரீர்!" என்றவாறே தீ மூட்டினர்.

மொழிப்பிரிவு பாதி எரிவதற்குள்-பக்கத்தில் நின்ற போலீஸ் அதிகாரி அதைப்பிடுங்கிக் கீழே எறிந்தார்; கீழே நின்ற ரிசர்வ் போலீஸ்காரர் ஒருவர் விரைந்து அதைத் தன் பூட்ஸ் காலால் மிதித்து தூள் தூளாக்கினர்!

ஏ கோவிந்தசாமியை அடுத்து மற்ற நான்கு தோழர்களும் அவ்வாறேகூறித் தீமூட்டினர்; அதையும் போலீஸ் அதிகாரி பிடுங்கி எறிந்தார். ரிசர்வ் போலீஸ்காரர் மீண்டும் பூட்ஸ்காலால் மிதித்து துவைத்தார்.

ஐவரணி தீமூட்டிய காட்சிகளை போலீஸ்துறை புகைப்படக் காரர்கள் உடனுக்குடன் அங்கும் இங்கும் விரைந்து படம் பிடித்துக்கொண்டனர்.

இரண்டு நிமிடம் கழித்து போலீஸ் வேனில் ஏற்றப்பட்டு ஐவரணியினர் சிவன் காஞ்சிபுரம் போலீஸ் நிலையத்திற்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

எரிப்புப் போராட்டத்தையொட்டி கைது செய்யப்பட்ட செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. செயலாளர் சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சி நகர தி. மு. க. செயலாளர் மார்க், பொதுக்குழு உறுப்பினர் சபாபதி ஆகியோரும் அந்தப் போலீஸ் நிலையத்துக் கொண்டு செல்லப்பட்டனர்.

சட்ட எரிப்பு நிகழ்ச்சியையொட்டி 'கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வெ. கிருஷ்ணமூர்த்தி எம். ஏ., பி. எல்., எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் கைது செய்து ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

மொழிப்போர் மூன்ருவது களம்!

நன்றி

திராவிடர் திருநாளாகிய பொங்கல் நன்னுளை முன்னிட்டு, வாழ்த்துக்கள் அனுப்பிய கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், நண்பர்கள் ஆகிய அனைவருக்கும் என் இதயங்கனிந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்பன்,

என். வி. நடராசன்

தலையங்கம்

மாலை 17. 1—2—64 மலர். 26

நல்ல வாய்ப்பு; நழுவ விடாதீர்!

——[0]——

தமிழக நகராட்சித் தேர்தல்களின் முதல் கட்டம் இத்திங்கள் 5-ம் நாள் துவங்குகிறது.

வழக்கம்போல் காங்கிரஸ்கட்சி தன்னுடைய வசதிகள் அனைத்தையும் பயன்படுத்தத் துவங்கிவிட்டது.

பணபலம்

பதவிபலம்

ஜாதிவெறி

—ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு காங்கிரஸ் கட்சி தனது தேர்தல் வேலையை மிகச் சாமர்த்தியமாகச் செய்துவருகிறது.

காங்கிரஸ் கட்சியின் 17-ஆண்டுகால ஆட்சியில் தொல்லையும் துன்பமும் அனுபவித்து வருகின்ற மக்கள், அதனுடைய யதேச்சாதிகாரத்துக்குப் படிப்பினை புகட்டும் ஒரு நல்ல வாய்ப்பை பிப்ரவரி 5, 17, 22 ஆகிய தேதிகளில் பெற இருக்கிறார்கள்.

மக்களது கரங்களிலே தற்போது இருக்கும் வாக்குச் சீட்டு, காங்கிரஸ் ஆட்சியை அதிகாரத்திலிருந்து இறங்கச்செய்யும் உரிமைச்சீட்டு அல்ல என்பதையும், நகரமன்றத் தேர்தல்களில் கட்சி மாச்சரியங்கள் தேவையற்ற ஒன்று என்பதையும் நாம் அறிவோம்.

நகர மன்றங்களில் நல்ல அரசியல் நாகரிகம் நிலவ கட்சி வேறுபாடுகூடாது—கட்சி அடிப்படையில் போட்டிகள்கூடாது என்பதை கழகம் பன்முறை சொல்லி வந்துள்ளது.

ஆனால் ஆள்கின்ற கட்சியான காங்கிரஸ்கட்சி இந்த ஜனநாயகத் தத்துவத்தை சிறிதும் உணராமல் கட்சியின் பெயராலேயே, நகரமன்றங்களுக்குப் போட்டியிட்ட காரணத்தால்—மற்ற கட்சிகளும் அதை பின்பற்ற வேண்டியநிலை ஏற்பட்டுவிட்டது.

காங்கிரஸ் கட்சியின் அதிகார வெறிக்கும், பணபலத்துக்கும் படிப்பினை அளிக்கவேண்டிய ஒரு நல்ல வாய்ப்பாக இந்தத் தேர்தல்களைப் பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறோம்.

கோவாவில் நடைபெற்று முடிந்த தேர்தல், ஆளும் கட்சியின் அகக்கண்களை சிறிது திறந்திருக்கும் என்று நம்பினோம்!

அதைப்போலவே,

திருச்செங்கோடு
சித்தூர்
ராஜ்கோட்
அம்ரோகா
பருக்காபாத்
திருவண்ணாமலை

ஆகிய இடைத் தேர்தல்களில் இடுப்பொடிந்த காங்கிரஸ், அதற்குப் பின்னரும் பல பிரச்னைகளில் தான்தோன்றித்தனமாகவே நடந்துகொண்டதைக் கண்டோம்!

ஆகவே காங்கிரசின் ஆதிக்கவெறி, அதிகாரவெறி குறைந்து, எதிர்க்கட்சிகளை மதிக்கும் மனவளத்தைப் பெறவும், அதேநேரத்தில், நகராட்சிப் பிரச்னைகளில் காங்கிரசைவிட மிகத் திறமையாக எதிர்க்கட்சிகள்—குறிப்பாக தி. மு. கழகம் நல்ல முறையில் நிர்வாகம் நடத்தும் என்பதை சென்னை மாநகராட்சியின் ஐந்தாண்டு கால நிர்வாகம் எடுத்துக் காட்டுவதை பொதுமக்கள் உணர்ந்து அதற்கேற்ப, வருகின்ற நகராட்சித் தேர்தல்களில், தி. மு. கழக வேட்பாளர்களை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

அதேநேரத்தில், காங்கிரஸ் கட்சியின் யதேச்சாதிகாரத்தை எப்படியும் முறியடிக்கவேண்டும் என்ற குறிக்கோளோடு, கழகத்துடன் உடன்பாடு கொண்டுள்ள

சுதந்திரா கட்சி

முஸ்லீம் லீக்

வேட்பாளர்களையும், ஆதரித்து,

உதயசூரியன்

நட்சத்திரம்

பிறைச்சந்திரன்

ஆகிய சின்னங்களை நீங்கள் வரும் தேர்தல்களில் ஆதரிக்க வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

நல்ல வாய்ப்பு இது; நழுவ விடாதீர் நாட்டு மக்களே என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

அறிவிப்பு

பொங்கல் திருநாளை முன்னிட்டும், அச்சு இயந்திரத்தில் ஏற்பட்ட பழுதின் காரணமாகவும், "திராவிடன்" 26—1—64ந் தேதிய இதழ் வெளிவரவில்லை.

தொடர்ந்து இக்கிழமை முதல் இதழ்கள் தடையின்றி வெளிவரும்.

அன்பர்கள் பொறுத்தருள வேண்டுகிறோம்.

—நிர்வாகி

வேட்பாளர் மனுவைத் திரும்பப்பெற்ற கழகத் தோழர்களுக்கு தி. மு. கழகம் பாராட்டு

——(0)——

தலைமைக்கழகச் சார்பில் நான் விடுத்த வேண்டுகோளுக்கேற்ப—1, 3, 19, 59, 65, 66, 68, 100 ஆகிய வட்டங்களில் சுயேச்சையாகப் போட்டியிடுவதாக மனு தாக்கல் செய்திருந்த கழகத் தோழர்கள்—முறையே இரத்தினம், சாரங்கபாணி, ஜெயராமன், சிவராஜ் வேணுகோபால், இராமச்சந்திரன், அப்துல்காதர், அண்ணாமலை ஆகியோர்—தங்கள் தங்களால் மாநகராட்சி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்த வேட்பாளர் மனுக்களை இன்று திரும்பப் பெற்றுக்கொண்டனர் என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

சென்னை 1, 46, 63, 93 ஆகிய வட்டங்களில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர்களையும்—

14, 19, 68, 71, 77 ஆகிய வட்டங்களில் போட்டியிடும் முஸ்லிம் லீக் வேட்பாளர்களையும்—

6, 15, 29, 30, 45, 75, 95 ஆகிய வட்டங்களில் போட்டியிடும் சுதந்தரா கட்சி வேட்பாளர்களையும்—

தி. மு. கழகம் ஆதரிக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அந்தந்த வட்டங்களில் உள்ள கழக அமைப்புக்கள்—தோழர்கள் ஆதரவாளர்கள் அந்தந்த வேட்பாளரை ஆதரித்துப் பணியாற்றியும், வாக்குகளைச் சேகரித்துக் கொடுத்தும் வெற்றிக்குப் பாடுபட்டுழைக்குமாறு தலைமைக்கழகச் சார்பில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

என். வி. நடராசன்

(அமைப்புச் செயலாளர், தி. மு. க.)

மராட்டியத்தில் மனோகரன்

மாநகராட்சித் தேர்தல் பணிக்கு பம்பாய் தி. மு. க. நிதியளிப்பு

சென்னை மாநகராட்சித் தேர்தலிலே நாம் பெருவாரியான இடங்களைப் பெறுவோம் என்று நாஞ்சில் கி. மனோகரன் பம்பாயில் மாநகராட்சி தேர்தல் நிதி சிறப்புக்கூட்டத்தில் கூறினார்.

மாநகராட்சித் தேர்தல் நிதிக்காக ரூ. 4500ஐ நாஞ்சில் கி. மனோகரனிடம் அளித்தபோது மேற்கண்டவாறு கூறினார்.

சென்னை மாநகராட்சித் தேர்தல் நிதிக்காக பம்பாய் தி. மு. க. நடத்திய சிறப்புக்கூட்ட நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக பாராளுமன்ற தி. மு. க. குழுத் தலைவர் கி. மனோகரன் எம். பி. அவர்கள் 18-3-64 அன்று மாலை 6-05 விமானத்தில் சாந்தா குருச் விமான நிலையத்தில் வந்து இறங்கினார். 'அண்ணா வாழ்க' என்ற பேரொலி வானைப் பிளக்க 'தாய்மொழி காப்போம்' என்ற சூளுரை விண்ணைப் பிளக்க நூற்றுக்கு மேற்பட்ட கழகத் தோழர்கள் வரவேற்றனர். கூடியிருந்த பிறர், அமைச்சரோ வந்திறங்கியது என்று வினவினர். பம்பாய் தி. மு. க. தாராவி தி.மு.க. தானா தி. மு. க. மாதுங்கா தி. மு. க. மான்கூர்டு தி. மு. க. ஆகியவற்றின் சார்பில் மலர்மாலை அணிவிக்கப்பட்டது.

ஊர்வலம்

19-1-64 மாலை நான்கு மணியிலிருந்து மாகீம் இரயிலடியில் பல்வேறு கிளைத் தோழர்களும் சார்பு மன்றத் தோழர்களும் ஊர்வலத்திற்காக வந்து திரண்டனர். ஊர்வலத்தை தாராவி கிளைச் செயலாளர் மா. தியாகராசன் மாதுங்கா கிளைச் செயலாளர் அன்புச் செல்வன் தோழர்களை அணியெனப் பிரித்து நடத்திச் சென்றனர். இருவண்ணக்கொடி வீசி பறக்க, தோழர் சின்னப்பா அவர்களின் முயற்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட நூற்றுக்கு மேற்பட்ட சைக்கிளில் முன்செல்ல ஏழாயிரம் பேர் கொடியேந்தி ஊர்வலம் சென்ற காட்சி சேரன் செங்குட்டுவன் வடபுலத்தில் வெற்றி உலா வந்ததை நினைப்பூட்டியது. 'அண்ணா வாழ்க' என்ற ஒலி முழக்கம் விண்ணைப் பிளந்தது. ஊர்வலம் மகீம் தாராவி, காலக்கில்லா, சாயன், மாதுங்கா வழியாகப் நப்பூ திடலை அடைந்தது.

சிறப்புக்கூட்டம்

நப்பூ திடலிலே இரவு 8 மணிக்கு சிறப்புக் கூட்டம் தொடங்கியது. நிதிக்குழுச் செயலாளர் ஆரியசங்காரன் வரவேற்புரை நிகழ்த்தினார். நிதிக்குழுத் தலைவர் எஸ். தியாகராசன் தலைமை தாங்கினார். திரு. மனோகரனுக்கு கீழ்க்கண்ட அமைப்புகளின் சார்பில் மாலைகளும் கைத்தறி ஆடைகளும் அணிவிக்கப்பட்டன.

பம்பாய் தி. மு. க. மாதுங்கா கிளை, தாராவி கிளை, கொலாபா, கப்பாலா குன்று, தோம்பிவலி, தானா, பாண்டுப், அந்தேரி செட்பூர், பாந்திரா, மான்கூர்டு ஆகிய கிளைகளும்; நாவலர் மன்றம், அண்ணா படிப்பகம், தென்னவர் கூட்டுறவு பொருளியற் பேரவை, முத்தமிழ் கலைமன்றம் ஆகிய மன்றங்களும், ஏ. ஆறுமுகம், என். இராமசாமி, நாஞ்சில் அன்பு, வி. எஸ். பாண்டியன், கே. சம்பத், நல்லய்யா, எஸ். பசுங்கிளப் பாண்டியன், ஆறுமுகம் ஆகியோரும் கைத்தறி ஆடைகள் மலர்மாலைகள் சூட்டி மகிழ்ந்தனர்.

பாராட்டுரை

தாயகப் பணிக்கு அள்ளிக் கொடுத்துக் கொண்டிருக்கும் பம்பாய் தி. மு. க.வின் பணியைப் பாராட்டி வருகின்ற சென்னை நகரமன்றத் தேர்தலில் கழகம் 70க்குக் குறையாத இடங்களில் வெற்றி வாகை சூடும் வாய்ப்பிருக்கிறது. என்று திரு. மனோகரன் கூறியபோது — கையொலி அடங்க ஏறத்தாழ இரு நிமிடம் இருபத்தேழு விநாடிகளாயின.

அறிஞர் அண்ணாவின் 'போஸ்டாபீஸ் சோசலிஷம்' என்ற ஆங்கில ஏட்டினை, பம்பாய் தி. மு. க. தனது முதல் ஆங்கில வெளியீடாக வெளியிட்டு அந்த ஏட்டினை நாஞ்சில் திரு. மனோகரன் வெளியிட்டார். இந்தநூல் வெளியிடுவதற்கான முழுபொறுப்பும் தோழர் த. மு. பொற்கோ அவர்களின் கண்காணிப்பில் நடைபெற்றது. அந்த ஏட்டின் விற்பனை பொறுப்பினை திரு. கலைச்செல்வன் மேற்பார்வையில் தோழர்கள் இராசி, பூபாலன், வடவைக்குயில் இராமையா, மாறன், அன்புச்செழியன், செகந்நாதன், சேகர், நெல்லைக்குமரன், காதர் மைதீன், மாதுங்கா கிளைத்தோழர்கள், வீரை கு. பாலன், வளவன ஆகியோர் ஏற்று அந்த வசூலையும் நிதியாக்கினார்கள்.

ரூ. 4500 நிதியளிப்பு

பல நெருக்கடிகளிலும் எதிர் நீச்சல் போட்டு பம்பாய் தி. மு. கழகத்தினர் தேனீக்கள் எனச் சுற்றிச் சேர்த்த தொகை ரூ. 4500 ஐ நிதிக்குழுப் பொருளாளர் திரு. புருடோத்தமன் தோழர் மனோகரனிடம் அளித்தார்.

பொதுத் தேர்தல் வசூலிலும், நகர்மன்றத்திலும் தனிப்பட்ட முறையில் வசூலில் முன்னின்ற தோழர்கள் நற்சான்றிதழ்களைப் பெற்றனர்.

நகரமன்றத் தேர்தல் வசூலில் பெரும்பாகம் முதற்பங்குத் தொகையான ரூ. 3145-75 வசூலித்ததற்கான சான்றிதழ்களைக் கிளைக் கழகச் செயலாளர் திரு. மா. தியாகராசன் பெற்றார். அவருக்கு உறுதுணையாக நிதிக்குழுத் தலைவர் எஸ். தியாகராசன், பொருளாளர் துரைபாண்டியன், த. மு. பொற்கோ, வீரை கு. பாலன், வீரை மு. சோமசுந்தரம் சேகர், அ. செல்லையா, வானமாமலை இரவீந்திரன் எல். கே. சண்முகம், நெல்லைக்குமரன் பத்தமடை பெ. செல்லையா ஆகியோரும் நிதிவசூலில் பெற்ற நற்சான்றிதழுக்கு உரியவர்களாவர்.

மற்றும் பொதுத் தேர்தல் நிதி வசூலிப்பிற்காக தோம்பி வலிக் கிளை இலங்கை சண்முகம், தாராவிக்கிளை எம். மணி மொழியாரும் பாண்டுப் கிளை தேவதாசனும், மாதுங்கா கிளை நேவிசும், மாநகராட்சித் தேர்தல் நிதிக்காக மான்கூர்டு கிளை ஏ. காதரும், தானாக் கிளை தா இராச. கோபாலனும், மாதுங்காக் கிளை சி. என். மணியும், தாராவிக்கிளை மா. இராபர்ட்டும், தானாக்கிளை க. சித்தராசனும், தாராவிக்கிளை செல்லையா நற்சான்றிதழ்கள் வழங்கிப் பாராட்டப்பட்டனர்.

இறுதியில் தலைவர் முடிவுரைக்குப் பின் நிதிக்குழுச் செயலாளர் சாந்தி வேந்தன் எம். ஏ. நன்றி கூறினார்.

o

உதயசூரியன்

சென்னை மாநகராட்சியின் ஆட்சிப் பொறுப்பைக் கழகம் ஏற்று ஏறத்தாழ ஐந்தாண்டுகள் ஆகின்றன.

அ. பொ. அரசு

அப்துல் காதர்

வி. முனுசாமி

குசேலர்

ஆகிய 4 மேயர்கள் இந்த 5 ஆண்டு கால நிர்வாகத்தைப் பொறுப்பேற்று மிகத் திறமையாக நடத்தினர்.

1959ம் ஆண்டு கழகம் 45 இடங்களைச் சென்னை மாநகராட்சியில் பெற்றதுமே, பல்லாண்டுகளாக அதன் நிர்வாகத்தைக் கைக்குள் வைத்துக்கொண்டு தர்பார் நடத்திய காங்கிரஸ் கட்சிக்குக் கலக்கம் கண்டு விட்டது!

45 இடங்களைப் பெற்று விட்டால் போதுமா, மேயர் ஸ்தானத்தைப் பிடிக்க முடியுமா?! என்று எகத்தாளம் பேசி, முதல் மேயர் தேர்தலில் சுயேச்சை ஒருவருக்கு முட்டுக் கொடுத்து பின்னர் கழக வேட்பாளரிடம் மூக்குடைபட்டனர்!

அதற்குப் பிறகு நடைபெற்ற மேயர் தேர்தலில் காங்கிரஸ் கட்சியின் அதிகாரபூர்வமான அபேட்சகரையே கழகம் தோற்கடித்தது!

தொடர்ந்து நடைபெற்ற மேயர் தேர்தல்களில் கழகம் வெற்றிக் கொடியே நாட்டி வந்தது. மேயர் ஸ்தானத்தில் கழகம் அமர்ந்திருப்பதைக் காணச் சகியாத காங்கிரஸ் கட்சி, ஒவ்வொரு மேயர் தேர்தலிலும் கழகத்திற்கு அளித்த தொல்லைகளையும், ஏற்படுத்திய இடர்ப்பாடுகளையும் இதற்குள் நாடு மறந்திருக்க நியாயமில்லை.

அடுக்கடுக்கான தொல்லைகளையும் தாங்கிக்கொண்டு கழகம் ஒவ்வோர் ஆண்டும் வெற்றி முரசு கொட்டி வந்திருக்கிறது.

இவ்வாண்டு நடைபெற்ற மேயர் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெளிப்படையாகவே பொதுவுடமையர்களுடனும், குட்டிக் காங்கிரசுக் கட்சியினருடனும் கூடிக் குலாவிக் கொண்டு மேயர் ஆசனத்தைக் கைப்பிடித்தனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற கடந்த ஐந்தாண்டு காலங்களாக, காங்கிரஸ் கட்சியினர் அதன் மீது எவ்வித குற்றச் சாட்டையும் எழுப்பவில்லை.

மாநகராட்சியின் பொறுப்பேற்ற கழகம், இதற்கு முன்னர் காங்கிரசார் ஆட்சியில் இருந்தபோது நடத்திய ஊழல் மிக்க நிர்வாகத்தை ஊருக்கு ஊர் எடுத்துரைத்தபோது அவகை மறுக்கின்ற ஆற்றல் — தைரியம் எந்தக் காங்கிரஸ்காரர்களுக்கும் எழவில்லை.

ஆனால் தேர்தல் நெருங்கி வரும் இந்தச் சமயத்தில், மக்களை மயக்கி ஓட்டுப் பெறவேண்டும் என்ற ஒரே காரணத்தால், கழகத்தின் மீது ஊழல் குற்றச்சாட்டுகளைக் காங்கிரசாரும் அவர்களோடு சேர்ந்து கம்யூனிஸ்டுகளும், குட்டிக் காங்கிரஸ்காரரும் செய்து வருகின்றனர்.

வெள்ளத்திலே மிதப்பவன், கரை தேறுவதற்காகத் தன் கையில் கிடைக்கும் துரும்பைக் கூட பெரியதோர் உதவியாக எண்ணிக் கொள்வதைப்போல், இன்றைய தினம் காங்கிரஸ் கட்சியினர், பற்றி எரிகின்ற பஞ்சாப் ஊழல் பிரச்சினையை ஒரு புறம் மூடி மறைத்துக்கொண்டே 'தி. மு. கழகத்தின் லாரி ஊழல், லாரி ஊழல்' என்று கூப்பாடு போட்டு வருகின்றனர்.

அந்த லாரி பிரச்சினை பற்றி, மாநகராட்சி மன்ற தி. மு. க. தலைவரும், மாநகராட்சியின் மத்திய குழுத் தலைவரும் ஆதாரபூர்வமாக நாட்டு மக்களுக்கு விளக்கியுள்ளனர்.

என்றாலும் கருத்து விளக்கங்களைக் கேட்டு புத்தியைத் திருத்திக் கொள்ளும் பண்பு பெற்றில்லாத காங்கிரஸ் கட்சி இன்னும் தன் கூப்பாட்டை விடவில்லை!

மாநகரத்துப் பொதுமக்கள் தக்க தீர்ப்பை அளிப்பதற்குக் காத்திருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம் மாநகராட்சி நிர்வாகத்தில் சாதித்த சாதனைகள் பலப்பல உண்டு என்றாலும், நாம் சிறப்பாகச் சில வற்றை மட்டும் இங்கே எடுத்துக் காட்ட விரும்புகிறோம்.

❀ காங்கிரசின் நிர்வாகத்திலிருந்து மாநகராட்சி கழகத்தின் நிர்வாகத்துக்கு வந்ததும், அதற்கு முன்னர் இருந்த கடன் தொகை கணிசமான அளவில் குறைக்கப்பட்டது.

❀ தி. மு. கழகம் மாநகராட்சிப் பொறுப்பேற்றவுடன் 3 கோடியாக இருந்த வருமானம் 6 கோடியாக உயர்ந்துள்ளது.

❀ சாலை பராமரிப்புக்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 35 இலட்சத்திலிருந்து 1 கோடியாக உயர்ந்தது!



உங்கள் ஊழியன்!

என். வி. என். சோமு பி.ஏ.

ஃ சாலைகளில் மின் விளக்கு வசதிகள் அதிகரிக்கப் பட்டன.

ஃ குடிதண்ணீர் வசதி குறைவின்றிக் கிடைக்க வழி ஏர் பட்டது. அதிக தண்ணீர் உபயோகித்துக் கொண்டு குறைந்த வரி செலுத்திக் கொண்டிருந்தவர்களின் வரித்தொகை அதிகரிக்கப் பட்டது. குடிநீர்வசதி பெருக வேண்டும் என்று, வாய்ப்பு ஏற்பட்ட பொழுதெல்லாம் மாநில அரசாங்கத்திடம் கழகம் வலியுறுத்தியதால்தான் காவிரி நீரை சென்னைக்குக் கொண்டுவரும் பிரச்னை ஆராயப்பட்டு வருகிறது.

ஃ கல்விக் கூடங்களுக்குப் பல புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டு, அவை நம் கழகத் தலைவர்களால் திறந்து வைக்கப்பட்டன.

ஃ பகலுணவுத் திட்டத்தைப் பாராட்டக்கூடிய முறையில் அமுல் நடத்தியது.

ஃ ஊழியர்களின் ஊதிய உயர்வையும் தன் பொருளாதார நிலைக்கேற்ப உயர்த்தியது.

ஃ வட்டங்கள் தோறும் பூங்காக்கள், அழகுநீர் ஊற்றுக்களைத் திறந்து வைத்தது.

ஃ பொதுமக்களின் வசதிக்கான சமுதாய மன்றங்களைத் திறந்து வைத்து குடும்ப நிகழ்ச்சிகளை ந'–த்திக் கொள்ள அனுமதித்தது.

ஃ குடிசைப் பகுதிகளில் ஏற்பட்ட தீ விபத்து, வெள்ள



எழுந்ததுகாண் இளைஞர் கூட்டம்!
எதிர்த்ததுகாண் இந்தித் திணிப்பை!

வடபுலத்தாரின் இந்தித் திணிப்பை எதிர்த்து, 17-1-64 அன்று தலைநகர் மாணவர்கள் போர்க்கோலம் பூண்டு கண்டன ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடத்தினர். நகர்க் கல்லூரி மாணவர்கள் அனைவரும் ஒரணியாகக் கோட்டைக்குச் சென்று முதலமைச்சரிடம் இந்தி எதிர்ப்பு விண்ணப்பம் தர முயன்றனர். ஆனால் ஆணவக் காங்கிரஸ் அரசின் தலைவர், மாணவர் அணியைக் காணாது அலைக்கழித்துவிட்டார். முதலமைச்சரின் இந்தப் பிடிவாதப் போக்கைக் கண்டிக்கும் வகையில், இனி அமைச்சர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதில்லை என்று மாணவர்கள் முடிவெடுத்துள்ளனர்.

இந்தி பேசாத மக்கள்மீது இந்தித் திணிக்கப்படுவதை எதிர்த்து தலைநகரில் சென்னைகல்லூரிகளைச் சேர்ந்த மாணவர்கள் இன்று மாபெரும் இந்தி எதிர்ப்பு ஊர்வலத்தை நடத்தினார்கள்.

சட்டக் கல்லூரி, அரசினர் கலைக் கல்லூரி, மாநிலக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, தியாகராயர் கல்லூரி புதுக் கல்லூரி மாணவர்கள் இந்த ஊர்வலத்தில் கலந்துகொண்டனர்.

சட்டக் கல்லூரி மாணவர்கள் அனைவருமே தம் வகுப்புகளுக்குச் செல்லவில்லை. பச்சையப்பன் கல்லூரியும் இயங்கவில்லை.

நேப்பியர் பூங்காவிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது.

ஊர்வலத்தினர் 'இந்தி ஆதிக்கம் ஒழிக' 'தாய் மொழி காப்போம்' என்று முழுங்கியவாறு சென்றனர்.

ஏறத்தாழ மூவாயிரம் மாணவர்களடங்கிய இந்த ஊர்வலத்தினர் முக்கிய சாலைகளின் வழியாகச் சென்றனர்.

கடல் போன்ற மாணவர்கள் பேரலைகளைப்போல் திரண்டு 'இந்தித் திணிப்பு ஒழிக, தமிழ் வாழ்க' என்று பெருமுழக்கமிட்டவாறே சட்டமன்ற வாயில் முன்பு காத்திருந்தனர்.

மூன்று மணி நேரமாகக் காத்திருக்கும் மாணவர் பட்டாளத்தைத் தமிழக அமைச்சர்கள் அவமதிக்கும் வகையில், அவர்களைக்காண மறுத்துவிட்டனர். மாணவர்களும் அமைச்சர்களைக் காணாமல் போவதில்லை என்று தீயெனக் காயும் கோடையையும் பொருட்படுத்தாது கண்ணியத்தோடு காத்திருந்தனர்.

போலீசார் கண்ணீர்ப்புகைக் குண்டுகளோடு பலத்த பாதுகாப்புடன் மாணவர்களைச் சூழ்ந்து நின்று கொண்டிருந்தனர்.

போலீஸ் உயர்தர அதிகாரிகள் மட்டும், "அமைச்சர்களைக் காணலாம் அமைதியோடிருங்கள்" என்று கூறினர். எனினும் பயனில்லை.

பின்னர் மாணவர்கள் திருவல்லிக்கேணி கடற்கரையை அடைந்து கண்டனக் கூட்டம் நடத்தினர். இக்கூட்டத்தில் பொதுமக்களும் திரண்டிருந்தனர். சட்டக் கல்லூரி மாணவரும் தமிழ் இலக்கியப் பேரவைச் செயலாளருமான மைக்கேல்ராஜ் தனது தலைமையுரையில் கூறியதாவது;—

"ஆட்சிமொழிப் பிரச்சினையை காமராசர் படித்தவர் பிரச்சினை என்றார். அதற்கு எதிர்ப்புத் தெரிவுக்க அப்போதே இயலாது போய்விட்டது. இன்று சென்னைக் கல்லூரி மாணவர்களனைவரும் ஒருமுகமாக அமைதியான முறையில் தங்களது எதிர்ப்பை இந்தித் திணிப்பிற்காகத் தெரிவித்தார்கள்.

மாணவர்களாகிய நாங்கள்—எங்கள் எதிர்ப்பை மிக அமைதியான முறையில் தெரிவித்தோம். இந்த எதிர்ப்பை — ஆர்ப்பாட்டத்தை—கிளர்ச்சியை தமிழக முதலமைச்சர் பக்தவத்சலம் ரவுடித்தனம் காலித்தனம் என்று கூறிவிட்டார்.

கண்ணியமாதவும் — கட்டுப்பாடாகவும் நடைபெற்ற மாணவர்களது பேரணியை ரவுடித்தனம்-காலித்தன மென்றால் — நாங்கள் எல்லாம் அப்படி செய்யவேண்டுமென்று நினைத்திருந்தால் பஸ்களைக் கொளுத்தியிருப்போம்—தபாலாபீசுகளுக்குத் தீ வைத்திருப்போம் — தண்டவாளத்தைப் பெயர்த்திருப்போம். அவ்வாறு ஏதும் நடைபெறவில்லை என்பதை பொதுமக்களும் அறிவார்கள்—எங்களுடன் வந்த போலீசாரும்—அதிகாரிகளும் உணர்வார்கள். இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை எந்தக் குருடனும் ரவுடித்தனம்—காலித்தனம் என்று கூறமாட்டார். முதலமைச்சர் பதவியில் இருக்கிறேமென்ற ஆணவத்தால் பத்தவத்சலம் கூறியிருக்கிறார். படிக்கின்ற மாணவர்களெல்லாம் ரவுடிகள் என்று கூறும் முதலமைச்சர் பக்தவத்சலத்தைக் கண்டு மாணவர் உலகம் வெட்கப்படுகிறது — வேதனைப் படுகிறது.

மைக்கேல் ராசுவின் தலைமையுரைக்குப் பின்னர் பல மாணவத் தோழர்கள் இந்தித் திணிப்பைக் கண்டித்துப் பேசினர்.

அவர்கள் பெயர்கள் வருமாறு: அரசினர்கலைக்கல்லூரிமுரளீதரன் தியாகராயர் கல்லூரி நாவளவன் சட்டக் கல்லூரி லத்தீப், மாநிலக் கல்லூரி இராசா முகமது, சட்டக் கல்லூரி தோழர்கள் அ. அ. ஜின்னா தாயுமானவன், கணேசன், பச்சையப்பன் கல்லூரி துரைமுருகன்.

விபத்துசகளுக்குத் தக்க நிவாரணம் செய்தது.

—இன்னும் இப்படிமாநகராட்சியில் கழகம் ஆற்றிய பணிகளை விவரித்துக்கொண்டே போனால் ஏடு இடங்கொள்ளாமற் போகும்!

மாநகராட்சியில் கழகம் ஆற்றிய பணிகளை மறைப்பதற்கென்றே, பொதுமக்கள் மத்தியில் காங்கிரசார், வரிகளை உயர்த்திவிட்டது கழகம் என்று கூப்பாடு போட்டனர்.

அதற்கு மாநகராட்சியின் மத்திய குழுத் தலைவர் திரு. வி. முனுசாமி அவர்கள் அளித்துள்ள ஆதாரபூர்வமான விளக்கத்தைக் கீழே தருகிறோம்:—

"ஏழை எளிய மக்கள் வாழும் வீடுகளுக்கு இருந்த வரி பதினேழரை சதவிகிதத்திலிருந்து பதினைந்து சதவிகிதமாக குறைக்கப்பட்டது.

சென்னை நகரில் உள்ள வீடுகள் அனைத்தும் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டன.

நாற்பத்தைந்து ரூபாய் மாத வாடகை வாங்குவதாகச் சொல்லப்படும் வீடுகளுக்கு வரி ரூ. 51 ஆக இருந்தது. கழகம் பொறுப்பேற்றவுடன் ரூ. 45 வாடகையுள்ள வீட்டின் வரி ரூ. 44-60 புதிய காசு அளிக்கப்பட்டன. இந்த வகையில் சென்னையில் 49000 வீடுகள் உள்ளன. இதனால் மாநகராட்சிக்கு ரூ. 5 லட்சம் வருமானத்தில் குறைந்தது.

மாதம் ரூ. 650 வாடகை வாங்குவதாகச் சொல்லப்படும் வீடுகளுக்கு 20 சதவிகிதமாகவிருந்த வாடகையை 25 சதவிகிதமாக உயர்த்தப்பட்டது. இப்படி சென்னையில் 1110 வீடுகள் உள்ளன. இதனால் ரூ. 18 இலட்சம் அதிக வருமானம் கிடைத்தது'.

—இவ்வண்ணம் ஏழை நடுத்தர மக்களுக்காகக் கழகம் மாநகராட்சி மூலம் ஆற்றியுள்ள பணியை மறைக்க காங்கிரசார் தப்புப் பிரச்சாரம் செய்கின்றனர்.

சென்னை மாநகரம் கழகக் கோட்டையாக மாறியதிலிருந்து காங்கிரசார் எவ்வளவுக்கெவ்வளவு கழகத்தின் மீது வசைபாட முடியுமோ அவ்வளவும் செய்து வருகின்றனர்.

காங்கிரசாரின் தொல்லைகளைச் சகித்துக்கொண்டு கழகம் ஆற்றிய பணிகளை மேலே எடுத்துக் காட்டினோம்.

இனி மாநகராட்சியின் வருவாயைப் பெருக்கக் கழகம் சொன்ன வழிகளையாவது காங்கிரஸ் அரசாங்கம் மதித்ததா என்றால், அதிலும் காங்கிரஸ் ஆட்சி ஜனநாயகத்தை மறந்து கட்சி வெறியையே இறுதிவரை நிலைநாட்டியது!

ஃ மாநகராட்சியின் வருவாயைப் பெருக்க சென்னைக்கு ரயில் மூலம் வருவோரிடம் பிரயாணிகள் வரியாக மிகக் குறைந்த தொகையை வசூலிக்கலாம் என்று கழகம் யோசனை சொன்னபோது அதைக் காங்கிரஸ் ஏற்க மறுத்தது!

ஃ நகரசபையின் வருமானத்தைப் பெருக்க, சென்னை நகர பஸ் போக்குவரத்தை. மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற கழகக் கோரிக்கையை காங்கிரஸ் அரசாங்கம் செவிமடுத்துக் கேட்கவில்லை.

—இந்த இரண்டு திட்டங்களும், மாநகராட்சியின் வருவாயைப் பெருக்கக்கூடிய திட்டங்கள். இதனால் கழகத்தின் புகழ் எங்கே அதிகரித்துவிடப் போகிறதோ என்ற பொருமையில் அவைகளைச் செவிமடுத்தும் காங்கிரஸ் அரசாங்கம் கேட்கவில்லை.

அதுமட்டுமல்ல! முன்னர் ஒரு சமயம் வெள்ள நிவாரண நிதிக்காக, சென்னை மேயர் அப்துல் காதர் திரட்டிய நிவாரண நிதிக்கு பிரதம மந்திரி பண்டித நேரு, 25000 ரூபாய்களை அனுப்பினார். ஆனால் கழக மேயர் மூலம் அத்தொகை நிவாரணத்துக்குப் பயன்பட்டால் கழகத்தின் பெயர் சிறப்படையும் என்று கருதி தமிழகத்தின் அன்றைய முதலமைச்சர் அதை மேயரிடம் கொடுக்க முடியாது என்று கூறினார்.

காங்கிரசார் மாநகராட்சியின் நிர்வாகப் பொறுப்பிலிருந்தபோது சத்தியமூர்த்தி, காமராசர் ஆகியோரின் சிலைகளைத் திறந்து வைக்க வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றியதை செயல்படுத்தியது தி. மு. கழகம்.

ஆனால் தான் பதவிக்கு வந்த அடுத்த நாளே அவனி புகழும் அறிஞரின் படத்தை தனது அறையிலிருந்து அகற்றிவிட்டார் இன்னாள் மேயர்!

காங்கிரஸ் கட்சி வளர,

காங்கிரஸ்காரர்கள் வாழ,

காங்கிரஸ் ஆதிக்கம் பெருக, மாநகராட்சியைப் பயன்படுத்தியது காங்கிரஸ் கட்சி.

ஆனால் கழகம் மக்களுக்குத் தொண்டாற்றுவதையே தலையாய கடமையாகக் கொண்டு பணியாற்றி வருகிறது.

எனவே தமிழகத்தின் தலைநகர மக்கள், மீண்டும் மாநகராட்சியைக் கழகத்தின் கைகளில் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

உலகு தழைக்க,
உதயசூரியன் வருகிறான்!
உங்கள் ஆதரவை
உதயசூரியனுக்கு அளியுங்கள்!

உதயசூரியன் உங்கள் ஊழியன்—உங்கள் காவலன்!

உதயசூரியன் உங்கள் வீட்டு விளக்கு—நாட்டுக்கு நல்ல தொண்டன்!

உதயசூரியனின் வெற்றி—உங்கள் வெற்றி!

தென்னகத்தில் ஒரு "தென்வியட்நாம்"

இந்தியை எதிர்த்து இன்னுயிர் ஈந்தான்! தமிழினைக் காக்கத் தன்னுயிர் தந்தான்!

'சாகையிலே தமிழ் படித்துச் சாகவேண்டும்—என் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்'- எனும் வீர வரிகளின் இரும்பு நெஞ்சங்கள் நெக்குருகும் விதத்தில்-

தி. மு. கழகத்தின் இந்தி எதிர்ப்புப் போராட்டம்—"ஒரு கட்சியின் இயக்கமல்ல; மக்களின் இயக்கம்-" என்று கோட்டையில் கொலு வீற்றிருப்போர் உணரும் வகையில்-

திருச்சி மாநகரில் சின்னச்சாமி எனும் செந்தமிழ் வாழும் நாவினன் ஒருவன் 27-வயதுக் காளை 25-ம் தேதி மேனி முழுதும் பெட்ரோலை ஊற்றிக்கொண்டு தீக் குளித்துக் கொண்டார்.

கேள்விப்பட்டோர் உள்ளத்தை உருக்கும் இந்தச் செயலைச் செய்தவர் கீழப்பழூர் தி. மு. கழகக் கிளையின் தீவிர உறுப்பினர்.

திருச்சி மாவட்டத்தில் அரியலூரை அடுத்த கீழப்பழூர் என்ற எழில் நிறைந்த சிற்றூர் தான் அவர் பிறந்த பூமி.

சிறுவயதிலிருந்தே தூய தமிழ் பேசும் பழக்கத்தை மேற்கொண்டார்.

"தமிழ் வளர்க்கும் கழகம் தி. மு. கழகம் தான்! தமிழ் காக்கும் தலைவன் அறிஞர் அண்ணா தான்!" - என்ற நம்பிக்கையில் அவரது உணர்வுகள் வளர்ந்தன.

இவரது மனைவி பெயர் கமலா.

வாழ்க்கைக் கடலிலேயே தன் மனத்தை சின்னச்சாமி மூழ்கடித்துக் கொள்ளவில்லை.

மத்திய அரசாங்கத்தின் இந்தித் திணிப்பு எனும் தீயால் தமது உயிருக்குயிரான தமிழ் வேகும் காட்சியை உலகுக்கு உணர்த்த தம்மைத் தாமே தீயிட்டுத் தற்கொலை செய்துகொள்வது என்ற முடிவுக்கு வந்தார்.

இந்த முடிவினை அவர் தனது மனைவிக்கும் நண்பர்களுக்கும் கடிதம் மூலம் தனித் தனியே தெரிவித்திருக்கிறார்.

"அன்புள்ள கமலம்! நீ கவலைப்படாமலிரு, நான் ஒரு அரிய காரியத்திற்காக செத்து மடிகிறேன்"—என்று அவர் மனைவிக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

அதுபோலவே கீழப்பழூர் தி. மு. க. செயலாளர் தோழர் மா. பிச்சைக்கும், அவருடைய நண்பரான ஆர். ராசு (முடிதிருத்தக உரிமையாளர், கீழப்பழூர்) ஆகியோருக்கும் அவர் 24-ம் தேதி அரியலூரிலிருந்து அஞ்சல் மூலம் கடிதங்கள் எழுதியுள்ளார்.

அவர்களுக்கு அந்தக் கடிதங்கள் 25-ம் தேதி பிற்பகல் தான் கிடைத்திருக்கின்றன. அதற்குள் அவர் தீக்கிரையாகிவிட்டார்.

அவரது நண்பர் நாகராசனுக்குச் சின்னச்சாமி எழுதிய நீண்ட கடிதமாவது :

ஏ. தமிழே நீ வாழவேண்டும் என்பதற்காக நான் துடியாய் துடித்துச் சாகப்போகிறேன்.

ஏ, தமிழே! உன்னைச் சாகடிக்க இந்தச் சட்டம் தீட்டப்பட்டுவிட்டது.

பண்டிதர் தந்த வாக்குறுதி அழிந்துவிட்டது.

தமிழை அழிக்கும் இந்திச் சட்டம் திரும்பப் பெறப்பட வேண்டும் அதனால் சிறையிலிருக்கும் அறிஞர் அண்ணாவும், தி. மு. க. வீரர்களும் விடுதலை செய்யப்பட வேண்டும்!

அதனால்தான் நான் போர் முனை செல்கிறேன். காலை 11-மணிக்குள் என் உடல்மீது பெட்ரோல் ஊற்றிக்கொண்டு செத்து விடுவேன்.

இதைப் பார்த்த பிறகாவது ஏன் இந்தி எதற்காக இந்தி?— என்று மக்கள் கேட்கட்டும்.

இதற்குப் பிறகாவது ஆளவந்தாருக்குத் துணிவு பிறக்கட்டும்!

—இவ்வாறு அவர் தனது நண்பர் நாகராசனுக்குக் கடிதம் எழுதியுள்ளார்.

கடிதத்தில் எழுதியவாறே தோழர் சின்னச்சாமி தன்னைத்தானே வருத்திக்கொண்டு செத்துமடிந்து விட்டார்.

25-ம் தேதி காலை நேரம் மக்கள் நடமாட்டம் மிகுந்த திருச்சி புகைவண்டி நிலையச் சந்திப்புக்கு எதிரே 17-லிட்டர் பெட்ரோல் வாங்கிக்கொண்டு வந்து தனது மேனிமுழுவதும் ஊற்றித் தீவைத்துக்கொண்டார்.

உடல் முழுவதும் தீப்பற்றி எரியும் போதும்கூட, அவர் 'தமிழ் வாழ்க! இந்தி ஆதிக்கம் ஒழிக!' என்று முழக்க மிட்டதாக இக்காட்சியை நேரில் பார்த்தவர்கள் கூறுகின்றனர்.

இந்தத் தகவல் அறிந்த போலீசார் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்தனர். திருச்சி மத்திய மருத்துவ மனைக்கு அவரை எடுத்துச் சென்றார்கள்.

மருத்துவ மனைக்குள் யாரும் அனுமதிக்கப்படவில்லை! எனவே தீ தாக்கப்பட்டு குற்றுயிரும் குலையுயிருமாய்க் கிடந்த சின்னசாமி கடைசிமுறையாக என்ன சொன்னார் என்று தெரியாமல் போயிற்று.

போலீசார் அதோடு நிற்கவில்லை. மாவட்ட தலைமைப் போலீசு அதிகாரியின் தலைமையில் புலன் விசாரிக்கத் தொடங்கினர்.

தமிழ்ப் பற்று காரணமாக இறந்த சின்னச்சாமிக்கு 'மூளைக் கோளாறோ?' என்று கேட்டுப் பார்த்தனர்; திரும்பத் திரும்பக் கேட்டுப் பார்த்தனர். ஆனால் - அப்படி யேதும் மூளைக் கோளாறுனவர் அல்ல! தெளிவான அறிவு படைத்தவர்' - என்றே பதில் வந்தது.

செய்தி கேள்விப்பட்ட தோழர் செழியன் எம். பி. து. ப. அழகமுத்து எம். எல். ஏ., தா. பழூர் ராமசாமி எம். எல். ஏ. ஆகியோர் மருத்துவமனை செல்வதற்குள் - சின்னச்சாமியின் வீட்டார் அனுமதி கொடுத்து விட்டார்கள் என்பதால் சின்னச்சாமியின் உடல் திருச்சி தென்னூரில் அடக்கம் செய்யப்பட்டு விட்டது!

பின்னர் தோழர் இரா செழியன் எம். பி. து. ப. அழகமுத்து, தா. பழூர் ராமசாமி எம். எல். ஏ. ஆகியோர் கீழப்பழூரிலுள்ள சின்னச்சாமி இல்லத்திற்குச் சென்று அவர் குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொண்டார்கள். இவர்களைக் கண்டதும் மறைந்த மாவீரன் சின்னச்சாமியின் மனைவியும் தாயாரும் 'கோ'வென்று கதறி அழுதார்கள்.

இதுபற்றி 'கழகப் பிரமுகர் ஒருவர் கூறியுதாவது

இது தி. மு. கழகத்தின் அனுமதி பெற்ற செயலும் அதற்கு உடன்பாடான செயலும் அல்ல முன்பே தெரிந்திருந்தால் சின்னச்சாமியைத் தடுத்து அவரது அரிய உயிரை காப்பாற்றி யிருப்போம். என்றாலும் இந்நிகழ்ச்சி தி. மு. கழகம் தியாக சீலர்களின் கூடாரம் என்பதற்கான அத்தாட்சியாகும். உள்ள முருக்கும் சின்னச்சாமியின் தியாகம் தமிழகத்தில் மட்டுமல்ல; இந்திய உபகண்டம் முழுவதும் எதிரொலிக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.

தோழர் சின்னச்சாமி தனிப்பட்ட முறையிலே தன்னைத்தானே தியாகம் செய்திருக்கிறார். இந்தி அரக்கிக்கு தன்னைத்தானே உயிர்ப்பலி கொடுத்திருக்கிறார். அவரது தியாகத்தை ஆட்சியாளர்களும், இந்தி வெறியர்களும் உணர வேண்டும் திருத்தவேண்டும். இந்தி எதிர்ப்பு என்பதுதி.மு. கழகத்தின் நடவடிக்கை மட்டுமல்ல; அது தமிழ் மக்களின் நெஞ்சத்தில் எல்லாம் பரவிக் கிடக்கும் உணர்ச்சியாகும்.

காஞ்சியில் ஒரு காங்கிரசுக்காரரே அரசியல் சட்டத்தின் மொழிப்பிரிவை எரிக்க முன்வந்ததும், தோழர் சின்னச்சாமி உயிர்த் தியாகம் செய்ததும் இதற்கு விளக்கமாகும்.

தென்வியட்நாமில் கொடுமைப் படுத்தப்பட்ட 'புத்தர்கள் தீக் குளித்து இறந்ததைப் போலவே வீரன் சின்னசாமியும் தீந்தமிழ் காக்க தன்னை அர்ப்பணித்துக் கொண்டான்!

ஆச்சாரியார் வேண்டுகோள்

முனிசிபல் ஆட்சியில் அரசியல் கட்சிகளைப் புகுத்தக்கூடாது என்பது சுதந்திரக் கட்சியின் அபிப்பிராயம் என்பது உறுதி.

ஆயினும் பிறகட்சியில்—முக்கியமாகக் காங்கிரஸ்கட்சி, பகிரங்கக்கட்சி மனப்பான்மையுடன் புகும்போது, சுதந்திரக் கட்சியின் சார்பில் சிலர் நிற்பதும், காங்கிரஸ் சூழ்ச்சிகளை எதிர்ப்பதும் அவசியமாகிவிட்டது. காங்கிரஸ்—கம்யூனிஸ்டு கட்சிகளின் ஐக்கியத்தையும் இப்போது காண்கிறோம்.

பல முனிசிபாலிட்டிகளில்—தற்போது சுதந்திரக்கட்சி அபேட்சகர்களும், தி. மு. கழக அபேட்சகர்களும், ஒன்று சேர்ந்தும் காங்கிரஸ் அபேட்சகர்களையும் கம்யூனிஸ்கட்சி அபேட்சகர்களையும் எதிர்த்து நிற்கிறார்கள்.

மக்கள் காங்கிரசுக்கும் கம்யூனிஸ்டுகளுக்கும் நல்ல தோல்வி கொடுத்து, அதிகாரத்திலிருக்கும் காங்கிரசுக்கு அடக்கம் கற்பிப்பார்களாக."

—ராசாசி (கல்கி 2-1-64-ம் நாளிட்ட இதழில்)

நல்லாட்சி காண வாராய்!

காரோடும் நீர்மண்ணும் முகிழ்ந்த நாளாய்
    கருக்கொண்டே உருப்பெற்ற கன்னித்தாயை
வேரோடு வீழ்த்துதற்கு அண்டை நாட்டார்
    வரிந்துகட்டும் நேரமடா தமிழத் தம்பி!
போராடப் புயவலிமைப் பெற்று நீயும்
    புல்லரெல்லாம் புறங்காட்டி ஓடும்வண்ணம்
வேரோடு களைந்துவெந் நீரும் ஊற்றி
    வினர்தம் விலாவொடிக்க விரைந்து வாராய்.

பாரதத்தைப் பண்டிதரே யாள வேண்டும்
    பொதுமொழியாய் இந்திதனை ஏற்றல் வேண்டும்
தேராதார் உடன்கூட்டாய் வாழ வேண்டும்
    தேயத்தால் இந்தியனாய் மாற வேண்டும்
பேரம்பேசித் தாய்மொழியை விற்றல் வேண்டும்
    பேதமையாம் பிறராள வேண்டு மாடா
சேரமன்னன் வடவர்முடி நெறித்த வீரம்
    சோரமுற்ற தேனப்பகைவர் நினைக்க வேண்டா!

கொடையிந்தே கொடிகட்டி ஆண்ட நாமும்
    கோழைகளாய்க் குருடர்களாய் வாழ லாமா?
தடைக்கல்லாய் நிற்கின்ற மொழியா திக்கம்
    தகர்த்தெறிய உள்ளமதில் உறுதி வேண்டும்
படையாண்ட மன்னவரின் பழமை பேசும்
    புலவர்பெரும் மக்களெல்லாம் திரண்டு வாரீர்!
மடைதிறந்த வெள்ளமென மொழியைக் காக்க
    மலர்ச்சோலை எனவெண்ணி சிறையும் செல்வோம்!

பத்தோடும் எட்டுப்கொண்ட சங்க நூலும்
    பதினெண்கீழ் கணக்கோடு நாலும் ரெண்டும்
முத்தான முத்தமிழின் சிலம்பும் பாகும்
    முக்கனியைப் பிழிந்தெடுத்தக் கவிதைச் சாறும்
கொத்தான இலக்கியங்கள் நாளும் பல்க
    கடலோடு மலையரணும் இயல்பாய் நிற்க
சித்தமிசை கொண்டபெரும் கொள்கை வைத்தே
    செம்மையுறு நல்லாட்சி காண வாராய்!

[புலவர். ப வேலழகன்]



ஆசிரியர், வெளியிடுபவர், ... நடராசன், அச்சிடுபவர், ... நடராசன்—சோழு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1

திராவிடன்

ஆசிரியர்: என். வி. நடராசன்.

பக்தவத்சலனுருக்கு பகிரங்கக் கடிதம்!

மதிப்பிற்குரிய

முதலமைச்சரவர்களே!

சனவரி 17-ம் நாள் சனநாயகப் பண்பிற்கு சிறிதும் குறைவேற்படாத முறையில் நடைபெற்ற மாணவர்களின் இந்தித் திணிப்புக் கண்டன ஊர்வலத்தையும், அதை மதிக்காத தங்களின் போக்கையும்; பின்னர் தாங்கள், தங்களது செயலுக்கு அளித்து வருகின்ற விளக்கங்களையும் கண்டு தமிழகமும், குறிப்பாக மாணவருலகமும் குழப்பமடைந்திருக்கிறது-நிலைமையைப் புரியவைக்க தாங்கள் தான் முயற்சிக்கவில்லையோ, அல்லது எங்களால்தான் அதை சரிவரப் புரிந்துகொள்ள இயலவில்லையோ —நிலைமையில், தங்கள் போக்கில், தாங்கள் அளித்துவரும் விளக்கங்களில் தெளிவில்லை. எனவே, அதைத் தெளிவாக்க வேண்டிய கடமை உணர்ச்சியினுலேயே தான் இந்த மடலை வரைகிறேன்.

மொழிச் சிக்கல், படித்தவர்களைப் பொறுத்தது; பாமரர்கள் அதைப்பற்றி ஏன் கவலைப்பட வேண்டுமென்றீர்கள் - அன்றுடம் காய்ச்சிகளை அவல நிலையில் வைத்திருக்கும்போது அவர்கள் ஆட்சி மொழிச் சிக்கல்பற்றி கவலைப் படமாட்டார்களென்பது தங்கள் கருத்து போலும். படித்தவர்களின் பிரச்சினை இதுவென்று தாங்களே ஒப்புக் கொண்டிருக்கும்போது படித்தவர்கள், படித்துக்கொண்டிருப்பவர்கள் இதற்குப் பரிகாரம் காண முனையும் போது அதைப் பாராட்டுவீர்களென எதிர்பார்த்தோம். ஆனுல் தாங்கள் ஏமாற்றமடைந்துவிட்டோம். படிக்கின்ற இவர்களுக்கு இப்பொழுது என்ன வந்துவிட்டது என தாங்கள் கேட்கும் கேள்வி, பிரச்சினையிலிருந்து நழுவச் செல்ல எத்தனிக்கிறீர்களே யன்றி, அதற்கு முடிவுகாண முயலவில்லையென்ற எண்ணத்தையே தோற்றுவிக்கிறது. பாம்புக்குத் தலையையும், மீனுக்கு வாலையுங்காட்டி தற்காலிகக் காப்பு தேடும் விலாங்குபோல இந்தப் பிரச்சினையில் வழுக்கிச் செல்வது தங்களைப் போன்ற நிரந்தர அமைச்சர்களுக்கு அழகல்ல.

எனக்கு ஒரு சந்தேகம். மாணவர்களை தற்போது ஆட்சிமொழிச் சிக்கல் பாதிக்கவில்லையென்பது உண்மைதான். ஆனுல் இன்றைய மாணவர்களாக இருப்பவர்கள் நாளையும்—தாங்கள் நிரந்தர அமைச்சு செலுத்துவது போல—நிரந்தரமான மாணவர்களாகவே நின்றுவிடப் போகிருர்களா? வாழ்க்கையில் அடியெடுத்து வைக்கும்போது ஏற்படும் முதற் பிரச்சினை மொழிப் பிரச்சினையாக வல்லவா இருக்கும்? ஏனெனில் மாணவப் பருவம் கடந்ததும் அடுத்து வேலை தேடும் பருவம் என்ற ஒன்றினைத் தானே நாங்கள் சந்திக்க வேண்டிவரும். வேலை தேடும் பொழுது அனைத்திந்திய துறைகளுக்கு நீங்கள் ஏன் போகிறீர்கள் என்று கேட்கும் தங்களின் நியாயத்தை—ஜனநாயக சோசலிசம், சமத்துவம்—சமவாய்ப்பு — அனைத்திந்தியா என்று மேடைதோறும் முழங்குகின்ற நியாயத்தை என்னுல் புரிந்துகொள்ள முடியவில்லை.

அமைதியாக நடந்த போராட்டத்தை தாங்கள் ரௌடித்தனம் என்று வர்ணித்தீர்களாம். இதை எங்கள் போராட்டம் எப்படி நடந்தது என்பது பற்றிய விபரத்தைப் புரியாமையையே காட்டுகிறது. எனவே அதை விளக்குவது எனது கடமையென உணர்கிறேன்.

17—1—64 அன்று சட்டக் கல்லூரி மாணவர் படை திரண்டது. கல்லூரிக்குள் செல்லுகின்ற மாணவர்களைப் பலவந்தமாகத் தடுக்கக் கூடாதென்ற கல்லூரித் தலைவரின் உத்தரவுப்படியே நாங்கள் பிற மாணவர்களைக் கேட்டுக் கொண்டோம் ‘மொழிக்காக ஒரு நாள் தியாகம்’ என்று. மொழியுணர்வும், மொழிப்பற்றுங் கொண்டவர்கள் திரண்டார்கள். ஊர்வலம் நேப்பியர் பூங்காவை அடைந்தது.

இதுபோலவே எந்தவித அசம்பாவிதமும் நடைபெருமல், கலைக் கல்லூரி, மாநிலக்கல்லூரி, தியாகராயர் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, புதுக்கல்லூரி மாணவர்களும் பெருந்திரளாய் பூங்காவை வந்தடைந்தார்கள். அங்கிருந்து புறப்பட்ட ஊர்வலம் சட்டமன்றம் நோக்கிவந்தது—ஜார் மன்னனைக் காணவல்ல-ஜனநாயக வழிவந்த தங்களைக்காண. ஆனுல் தாங்களோ, ஜாருக்கும் மேலே சென்றீர்கள்; நீரோவுக்கு நேர் என்று காட்டிவிட்டீர்கள். மாணவர்கள் நடந்து கொண்டவிதம் எனக்குப் பிடிக்கவில்லையென்றீர்களாம்.

எங்களை ரௌடிகள் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற அந்த பாவத்திற்காக நாங்கள் என்னதான் செய்தோமென்பதை நான் எண்ணி எண்ணிப்பார்க்கிறேன். கோஷங்களை முழக்கினுேமென்பதைத் தவிர நாங்கள் வேறெதுவுமே செய்பவில்லை. போக்குவரத்து கூட, 3000 மாணவர்கள் ஊர்வலமாகவந்தும் தடைப்படவில்லையே. பின் ஏன் தங்களுக்குக் கோபம் பொத்துக் கொண்டுவந்தது.

எங்களுடைய குரலே, தங்களுக்கு எரிச்சலை மூட்டிவிட்டது என்று கூறுகின்ற நேரத்தில், மாணவர்களாகிய நாங்கள் எப்படி நடத்தப்பட்டோம்; அதற்குப் பிறகும் எப்படி நடந்துகொண்டோம் என்பதைத் தாங்கள் தெரிந்துகொள்வது மிக முக்கியமானது. ஏனெனில் அது தங்களுக்குப் பாடமாக இல்லாவிட்டாலும் பயனுள்ளதாக இருக்கும்! மாணவர்கள் சட்டமன்ற வாயிலை அடைந்ததும் தடுத்து நிறுத்தப்பட்டோம் போலீஸ் படையினரால்!—அடேயப்பா, தாங்கள் எவ்வளவு படை வைத்திருக்கிறீர்கள். இரும்புத்தொம்பி போலீஸ் என்ன; துப்பாக்கி தூக்கி வந்தவர்கள் எத்தனை பேர், கணக்கெடுக்க முடியவில்லை என்னுல் அவர்கள் கழுத்தில் தொங்கிய பெட்டியில்தான் கண்ணீர்ப் புகை குண்டுள் இருந்ததாம்—விஷயத்திற்கு வருவோம். தடுத்து நிறுத்தப்பட்ட எங்களிடம் உயர்தர போலீஸ் அதிகாரி ஒருவர் எல்லோரையும் செல்ல அனுமதிக்க மாட்டோம்; பிரதிநிதிகள் மாத்திரம் உள்ளே போகலாமென்ருர். நாங்களும் இசைந்தோம். மாடியை அடைந்ததும் தங்களது பிரதம தனி அலுவலர் சீற்றமுடன் வெளியே வந்தார். பாருங்களேன் அவர்கள் கத்துவதை! என்ருர். நாங்கள் பொறுத்துக் கொண்டதோடு நண்பர்களையும் பொறுமையாக இருக்கச் சொன்னுேம். மயான அமைதி நிலவியது மாணவர்களின் மத்தியில். மாணவப் பிரதிநிதிகளாகச் சென்ற நாங்கள் திண்ணையில் நிறுத்தப்பட்டோம். மற்றவர்களோ ஒண்டுவதற்கும் நிழலில்

7(-ம் பக்கம் பார்க்க)

தலையங்கம்

மாலை 17. 8—2—64 மலர். 27

முரசு கொட்டும் முதற் கட்டம்!

—[0]—

இத்திங்கள் 5-ம் நாள் நடைபெற்று முடிந்த நகராட்சித் தேர்தலில் முதல் கட்டத்தின் முடிவுகள், காங்கிரஸ் கட்சியின் இடுப்பொடியும் விதத்தில் வெளிவந்துள்ளன.

எந்த எந்த நகரசபை காங்கிரசின் கோட்டை என எண்ணியிருந்தனரோ அந்த நகரசபைகளில் கழகம் வெற்றி முரசு கொட்டியிருக்கிறது.

திருநெல்வேலிச் சீமை காங்கிரசின் கோட்டை என்று பேசி வந்தனர். அந்தக் காங்கிரஸ் கோட்டை தூள்தூளாகியது!

பொள்ளாச்சியில் கழகம் மிகப்பெருமளவில் வாகைசூடியுள்ளது!

சென்ற நகரசபைத் தேர்தல்களைவிடக் கழகம் மிகப் பெரும் வெற்றியை முதல் கட்டத்திலேயே அடைந்துவிட்டது.

	முன்பு இருந்த இடம்	இப்போது
பொள்ளாச்சி	2	13
வேலூர்	4	12
திருநெல்வேலி	1	9
ஆரணி	1	11
உடுமலைப்பேட்டை	2	4
வாலாஜாப்பேட்டை	2	4
நாகப்பட்டினம்	2	6
பெரியகுளம்	1	4
கும்பகோணம்	—	4
திருவாரூர்	—	2
தாராபுரம்	—	4
மேலப்பாளையம்	—	3
திருப்பூர்	—	1

—இவ்வண்ணம் முன்பு எங்கெங்கு கழகம் இல்லையோ, அங்கெல்லாம் கழக உறுப்பினர்கள் பெருவாரியாக வாகை சூடியிருக்கிறார்கள்.

நகரசபைத் தேர்தல் பிரச்சாரத்தில் காங்கிரசும், கம்யூனிஸ்டும், குட்டிக் காங்கிரஸ் கட்சியினரும், கழகத்தின் மீது இல்லாத—பொல்லாத கற்பனைகளைப் பிரச்சாரம் செய்தாலும் பொதுமக்கள் அவைகளை நம்பாமல் நல்ல தீர்ப்பளித்துள்ளனர்.

அடுத்து இரண்டாவது கட்டத்திற்கான தேர்தல் இத்திங்கள் 17-ம் நாள் நடைபெற இருக்கிறது. முதல் கட்டத் தேர்தலைக் காட்டிலும் கழகத்திற்குப் பொதுமக்கள் இன்னும் அதிக வெற்றி வாய்ப்பை வழங்கும் வகையில் தங்கள் வாக்குகளை அளிக்கவேண்டுகிறோம்.

பணபலம், பதவிபலம் ஆகியவற்றைக் காட்டி மிரட்டியும், பொதுமக்கள் காங்கிரசின் யதேச்சாதிகாரத்தை முறியடிக்க முனைந்திருப்பது வரவேற்கக் கூடியதாகும்.

இத்திங்கள் 17-ம் நாள் நடைபெற இருக்கும் தேர்தலிலும் கழகத்திற்கு நல்ல பல வெற்றிகளைத் தேடித்தரவேண்டும் என்று நாட்டுமக்கள் அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

அதற்குப் பிறகு இறுதிக் கட்டமாக நடைபெற இருக்கும் சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலிலும் கழகத்திற்குச் சிறப்பான வெற்றியைத் தேடித்தரும்படி அனைவரையும் மீண்டும் ஒரு முறை வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

சிங்கத்தமிழன் சின்னச்சாமி!

—(0)—

"தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்—உயிர்த் தித்திப்பை எண்ணிடப்போவதில்லை"

—இது வெறும் கவிதை வரிகள் அல்ல! உரிமை முரசு கொட்டும் தமிழர்களின் உணர்ச்சி கீதம்—இதய நாதம்!

இந்த உணர்ச்சி வரிகளுக்கு உருவம் கொடுத்து, கவிதைத் தலைவனாகிவிட்டான் தீரன் சின்னச்சாமி.

அவன் தியாகம் வீண்போகாது!

அவன் குறிக்கோள் வீழ்ச்சியடையாது!

அவன் கொள்கை வெல்லாமற் போகாது!

கோவையில், 2000 ஓட்டு வித்தியாசத்தில் ராசமாணிக்கம் வெற்றி!

—:—

கோவை நகராட்சித் தேர்தலில் தி. மு. க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் எஸ். ஏ. ராமசாணிக்கம் காங்கிரசு வேட்பாளரை ஏறத்தாழ 2000 ஓட்டு வித்தியாசத்தில் தோற்கடித்து வெற்றி வாகை சூடியுள்ளார்.

கோவையில் காங்கிரசுக்கு ஓடியவர் தோல்வி!

—(0)—

கோவை நகராட்சித் தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்ட நகராட்சி துணைத் தலைவர் எஸ். ஆறுமுகம் கழக வேட்பாளரால் தோற்கடிக்கப்பட்டார்.

எஸ். ஆறுமுகம் சென்றமுறை தி. மு. க. நகராட்சி உறுப்பினராகத் தேர்ந்து எடுக்கப்பட்டு நகராட்சித் துணைத் தலைவராக பதவி ஏற்றவர் என்பதும், பிறகு காங்கிரசில் சேர்ந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திருப்பூரில் கம்யூனிஸ்டுகளுக்கு பலத்த அடி!

—0—

திருப்பூர் நகராட்சியில் சென்றமுறை கம்யூனிஸ்டு ஆதரவு பெற்றவர்தான், நகராட்சி தலைவராக இருந்தார். ஆனால் இந்த முறை நகராட்சியில் கம்யூனிஸ்டுகள் நான்கு இடத்தைத்தான் பெற்றுள்ளனர்.

இந்தமுறை திருப்பூர் நகராட்சியில், இல்லாத ஓர் இடத்தை தி. மு. க. பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

பம்பாய் தி. மு. க. வெளியீடு

அறிஞர் அண்ணு எழுதிய ஆங்கில ஏடு

போஸ்ட் ஆபீசு சோசலிசம்

(POST OFFICE SOCIALISM)

கருத்துக் கருவூலம் ! பெறற்கரிய பெட்டகம் !!

அனைவரும் அவசியம் படித்துணர வேண்டிய அருமையான ஏடு.

விலை ரூ. 1. (விற்பனையாளர்களுக்கு கழிவு உண்டு)

தனியாக அஞ்சலில் பெற ரூ. 1-20 காசு

குறிப்பு : இந்நூல் விற்று வரும் தொகையனைத்தும் சென்னை மாநகராட்சி மன்ற தேர்தல் நிதிக்கு அளிக்கப்படும்.

முழு விவரங்கட்கு : எல். தியாகராசன்
செயலாளர் பம்பாய் தி. மு. கழகம்
திராவிடரகம்,
தாராவி—பம்பாய்-7

முதல பக்கத் தொடர்ச்சி

லாத அந்த மெரீனு தார் ரோட்டில்; கொதிக்கும் வெயிலில் நிறுத்தப்பட்டார்கள்.

இதற்கிடையில் இன்னொரு அதிகாரி வந்தார்! திண்ணையில் நின்ற எங்களைத் தெருவுக்குத் துரத்தினர். நிலைமையை நாங்கள் விளக்கினோம். முதலமைச்சரைக் காணுவதற்கு அனுமதி வாங்கித் தருகிறோமென்ற உறுதிமொழியோடு உங்களைப் போன்ற அதிகாரியொருவர் எங்களை அழைத்து வந்து இங்கே நிற்க வைத்தார் என்றோம்! அதற்கு நான்தான் பெரிய அதிகாரி போங்கள் எங்களைத் தூண்டி விட்டதாக தாங்கள் திருவாய் மலர்ந்தருளினீர்களாம். தாங்கள் யாரை சூசகமாகக் குறிப்பீட்டீர்களென்பது எங்களுக்குப் புரிகிறது. போராட்டத்தில் காங்கிரஸ் மாணவர்களும் கலந்து கொண்டார்கள் என்ற உண்மை உங்களுக்குத் தெரியாமலிருக்கலாம். தயவு செய்து பழைய பத்திரிகைகளைப் புரட்டிப் பாருங்கள். முடிந்தால் 7-10-63 தேதியிட்ட முரசொலியைப் படித்துப் பாருங்கள். போராட்டத்தில் கலந்துகொள்ள அனுமதி தாருங்களென நாங்கள் கேட்டதற்கு அறிஞர் அண்ணு அவர்கள் அளித்த பதிலைப்

நாஞ்சில் மைக்கல் ராசு

வெளியே என்றுர். புதிதாக வந்தவர். யார் பெரியவரென்பதை எங்களால் புரிந்துகொள்ள முடியவில்லை, அன்றைய நிலையில்.

இவ்வாருக அலைக்கழிக்கப்பட்ட நாங்கள் கொதிக்கும் வெயிலில், உணவை மறந்து மாலை 4 மணி வரை காத்திருந்த பிறகு தான், தாங்கள் எங்களைக் காண விரும்பவில்லையென்ற சேதி எங்களுக்குக் கிடைத்தது. அதற்குப் பிறகுங்கூட நாங்கள் கண்ணியத்தின் எல்லையிலிருந்து சற்றும் பிறழ்ந்து விடவில்லை. ரௌடித்தனமென தாங்கள் வருணித்தீர்களே, அந்த அளவுக்கு செல்லாவிட்டாலும், மனித ஆசாபாச உணர்ச்சிகளுக்குக்கூட நாங்கள் ஆட்பட்டிருந்தால் நிச்சயமாக நீங்கள் அனுப்பிய கண்ணீர்ப் புகை குண்டுகள் காலியாகியிருக்கும்; குண்டாந்தடிகள் முறிந்திருக்கும்; குண்டுகள் முழங்கியிருக்கும். மெரீனு சாலையைத் தாங்கள் கடந்து செல்லும்போது அதன் மீது பூசப்பட்ட புதிய சிவப்பு வர்ணத்தைக் கண்டு சிந்தை மகிழ்ந்திருப்பீர்கள். ஆனல் மெரினுக் கடற்கரை சாலையின் கறுப்போடு சிவப்பை கலக்க நாங்கள் விரும்பவில்லை.

இதற்கிடையில் இன்னுமொரு சேதி கேள்விப்பட்டேன். யாரோ படித்த பிறகாவது தங்கள் தெளியாத நெஞ்சம் தெளியுமென எதிர்பார்க்கிறேன். எங்கள் கரங்கள் அந்தக் கண்ணியத்தின் காவலனல் கட்டி வைக்கப்படா விட்டால், நாங்கள் சட்டமன்றத்தின் முன் கூடியிருக்க மாட்டோம்; அறப்போரில் ஈடுபட்டு கொட்டடிகளை நிரப்பியிருப்போம்! கனம் பக்தவத்சலம் அவர்களே! அண்ணன் சுட்டு விரற்கடை தூக்கி விட்டால்..................இது பாட்டல்ல.........எங்கள் சூளுரை!

தாங்கள் இன்னும் ஒரு படி மேலே சென்று யாரோ ஆளுக்கு ஐந்து ரூபாய் கொடுத்ததாக ஒரு அபத்தமான, அசிங்கமான, அருவருக்கத் தக்க தகவலைத் தந்தீர்களாம். இதைக் கேட்டு மாணவர் உலகம் உண்மையாகவே கொதிக்கிறது.

தாங்கள் கூறுவதுபோல் மாணவர்களிடையில் 'கூலிகள்'குக் கூட கிடையாது எங்கள் காலத்தில்!

சென்னையில் 27 கல்லூரிகள் இருக்கின்றன 25000 மாணவர்கள் இருக்கிருர்கள்! 6 கல்லூரிகளே போராட்டத்தில் கலந்து கொண்டன. அதிலும் அனைவரும் கலந்து கொள்ளவில்லை யென யாரோ ஒரு பிரகஸ்பதி கொடுத்த புள்ளி விவரங்களைப் பார்த்து தற்காலிக சாந்தி பெற்றீர்களாம்! ஒரு உண்மையைப் புரிந்து கொள்ளுங்கள். மூவாயிரம் மாணவர்களே போராட்டத்தில் பங்கு பெற்ருர்களென்ருல், மற்றைய அனைவரும் தங்கள் ஆட்சிமொழி பற்றிய 'வீரக்' கொள்கையை ஆதரிக்கிருர்களென்று பொருளில்லை.

இத்தனையும் விளக்கிய பிறகுங்கூட நிலைமையைத் தாங்கள் புரிந்துகொள்ளவில்லை யென்ருல் தங்கள் மீது அனுதாபப்படுவதை தவிர வேறு வழியில்லை எங்களுக்கு.

சிந்தியுங்கள்; செயல்படுங்கள்

——(0)——

நகரசபை வருமானம் முன்பு ரூ. 3 கோடியாக இருந்தது. இன்று ரூ. 4 கோடியாக உள்ளது. இந்த ஒரு கோடி ரூபாய் வருமானம் அதிகரிக்க சென்னை ஜி. க. தலைமை நடைமுறைக்கு சாத்தியமான சிலபல யோசனைகளை—நகரசபையிலுள்ள தி. மு. க. தலைமைக்கு எடுத்துக்காட்டியது. நகரசபை தி. மு. க. தலைமை அதை ஏற்று அமுல்படுத்தியுள்ளது. இதன் காரணமாக தாங்கக்கூடியவர்களுக்கு வரி உயர்வும் தாங்கமுடியாதவர்களுக்கு வரிச் சலுகையும் ஏற்பட்டது.

இதன் காரணமாக, பி. அண்டு சி. மில் முதலாளி ஏற்கனவே தண்ணீர் வரி 5 இலட்சம் ரூபாய் கட்டினன்; இன்று 10 இலட்சம் ரூபாய் கட்டிவருகிருன். அண்ணமலை மன்றம் முன்னர் ரூ. 300 வரி செலுத்தியது; இன்று ரூ. 3 ஆயிரத்திற்கு மேல் வரி செலுத்துகிறது. சூளை மில் கட்டிட நிர்வாகிகள் ரூ. 2 ஆயிரம் முன்னர் வரி செலுத்தி வந்தார்கள்; இன்று 32 ஆயிரம் ரூபாய் வரியாக வசூலிக்கப்படுகிறது.

ஒரு வருடத்திற்கு ரூ. 500க்கு குறைவாக கட்டிட வாடகையாக வரும் கட்டிடத்திற்கு முன்னர் 17 சதம் வரி—இன்று வரி 15 சதம்; இதனல் 49 ஆயிரம் வீடுகளின் சொந்தககாரர்கள் சிறிது நன்மை அடைந்தனர். (ரூ. 8 லட்சம் சலுகை).

நகரசபை சிப்பந்திகளுக்கும் தொழிலாளர்களுக்கும் சில சலுகைகள் செய்து தரப்பட்டுள்ளன.

சென்னை நகரசபையிலுள்ள காங்கிரஸ் கட்சியினராலும், வெளியேயுள்ள காங்சிரஸ் கட்சியினராலும் இன்றைய நகரசபை தி. மு. க. நிர்வாகத்தை ஆள லாயக்கில்லாதது என்று தாக்கி விஷமத்தனமாக பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

காங்கிரஸ் கட்சியினர் மட்டும்தான் திறமையாக ஆள முடியுமென்று மாற்றுக் கட்சியினரை திட்டமிட்டு தாக்கி, மக்கள் கவனத்தை வேறு திசையில் திருப்ப, தி. மு. க. எதிர்ப்பு, கம்யூனிஸ்ட் எதிர்ப்பு பிரச்சாரங்களை காங்கிரஸ் கட்சியினர் செய்து வருகிருர்கள்.

காங்கிரஸ் கட்சியின் தவருன பிரச்சாரங்களை உடனுக்குடன் நாம் அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்யவேண்டும். இன்னும் பல நன்மைகளை செய்ய மத்திய சர்க்காரும் ராஜ்ய சர்க்காரும் போதிய மானிய உதவியும் கடன் உதவியும் செய்ய வேண்டுமென்று ஆக்கப்பூர்வமாக பிரச்சாரம் செய்யவேண்டும்.

—1960-ஆம் ஆண்டு செப்டம்பர் 9, 10, 11 ஆகிய நாட்களில் நடைபெற்ற இந்திய கம்யூனிஸ்டுக் கட்சி சென்னை மாவட்ட 4-வது மாநாட்டில் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்ட 'சென்னை ஜில்லா அரசியல் ஸ்தாபன அறிக்கையில்' (3-வது பக்கம்)

உண்மை கம்யூனிஸ்டுகளே! இப்போது சிந்தியுங்கள், தண்டனைக் குறைவு பெற்றதற்காக ஒரு ஆயுள் கைதியின் கூட்டம் காங்கிரசுக்கு ஆலவட்டம் சுற்றுகிறது என்பதற்காக இத்தனை நன்மைகள் செய்த தி. மு. க.வை எதிர்க்கத்தான் போகிறீர்களா? முதலாளிகளின் கைப்பாவையாக மாறத்தான் போகிறீர்களா? தொழிலாளர்கள் இயக்கமாம் தி. மு. க.வுக்கு துரோகம் செய்யத்தான் போகிறீர்களா?

சிந்தியுங்கள்! செயல்படுங்கள்!

பதிவு எண்: 717
திராவிடன்
தொலைபேசி 33581

வெற்றி முரசு கொட்டுகிறது கழகம்!

தமிழகத்தில் இத்திங்கள் 5-ம் நாள் நடைபெற்ற நகராட்சி தேர்தல்கள் பலவற்றில் கழகத் தோழர்கள் வாகைசூடிய செய்திகள் வந்த வண்ணம் இருக்கின்றன. அந்தச் செய்திகள் கீழே தரப்படுகின்றன. (7—2—64 வரை)

திருநெல்வேலி

5-வது வட்டம்
மஸ்தான்

7-வது வட்டம்
சூரியநாராயணன்

9-வது வட்டம்
வள்ளிநாயகம்

10-வது வட்டம்
கிருஷ்ணமூர்த்தி

மற்றும் பத்து வட்டங்களில் கழகத் தோழர்கள் வாகை சூடியுள்ளனர்.

கழக ஆதரவு பெற்ற சுயேச்சை இருவரும் வெற்றி பெற்றுள்ளனர்.

தஞ்சாவூர்

தஞ்சாவூரில் தி. மு. கழகமும் காங்கிரசும் சமமான இடங்களைக் கைப்பற்றி வருகிறது. இப்போதைய நகராட்சி உறுப்பினர் ஒருவர்தான் வெற்றி பெற்று உள்ளார்.

இதுவரை கிடைத்த செய்திகளின்படி கட்சிநிலை வருமாறு:

தி. மு. கழகம்	4
காங்கிரசு	4

கும்பகோணம்

மூன்று கழகத் தோழர்கள் வெற்றி பெற்றுள்ளனர். கழக ஆதரவு பெற்றவர் ஒருவரும் வெற்றி பெற்றுள்ளார். சுதந்திரா கட்சி வேட்பாளர் ஒருவரும் வெற்றியடைந்துள்ளார்.

உடுமலைப்பேட்டை

முதல் வட்டம்
கந்தசாமி

இரண்டாவது வட்டம்
சாதிக்பாட்சா

அரக்கோணம்

சூடாமணி அம்மாள்

திருப்பத்தூர்

2-வது வட்டம்
டி. வி. நடராசன்

வாலாஜாப்பேட்டை

3-வது வட்டம்
எஸ். ஆர். இராமசாமி
[ஆதரவு]

5-வது வட்டம்
ரங்கசாமி

9-வது வட்டம்
11-வட்டம்
மு. கண்ணன்

நாகரத்தினம் [பொது]
ராஜேஸ்வரி அம்மாள் (தனி)

பரணி

ரங்காச்சாரி
[கழக ஆதரவு]

குடந்தை

இரண்டாவது வட்டத்தில் கழக வேட்பாளர் எம். பழனிச்சாமி வெற்றிபெற்றூர்.

பொள்ளாச்சி

பொள்ளாச்சியில் பதிமூன்று கழகத் தோழர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.

வேலூர்

எம். பி. சாரதி வேலூரில் வெற்றிபெற்றுள்ளார்.

ஆறு தி. மு. க. உறுப்பினர்களும், கழக ஆதரவு பெற்றவர்கள் ஆறு பேரும் வெற்றிபெற்றுள்ளனர்.

காங்கிரசு இரண்டே இடங்களில் வெற்றிபெற்றது.

திண்டுக்கல்

5-வது வட்டம்
சேசு

8-வது வட்டம்
கிருஷ்ணமூர்த்தி [பொது]
பழனியப்பன் [தனி]

1-வது வார்டு தி. மு. க. ஆதரவு.

தூத்துக்குடி

கழக வேட்பாளர் ஒருவர் வெற்றிபெற்றுள்ளார்.

செங்கோட்டை

11-வது வட்டம்
ஜின்னு பி.ஏ.,
சண்முகம் [தனி]

(இருவரும் கழக ஆதரவு பெற்றவர்கள்.)

பெரியகுளம்

மூன்று கழகத் தோழர்கள் வெற்றிவாகை சூடியுள்ளனர்.

பாளையங்கோட்டை

நான்கு கழகத் தோழர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.

திருவண்ணாமலை

திருவண்ணாமலையில் தி. மு. க. நகரச்செயலாளர் வெற்றி பெற்றுள்ளார்.

ஆம்பூர்

முதல் வட்டாரத்தில் கே. கோ. பாலும், மூன்ருவது வட்டாரத்தில் ஏசுவடியானும், நான்காவது சுந்தரேசனும், அதே வட்டாரத்தில் நின்ற பெண் வேட்பாளர் பி. முனியம்மாள் அவர்களும், 8-வது வட்டாரத்தில் எஸ். அண்ணாமலை அவர்களும் வெற்றிபெற்றுள்ளனர். ஆக ஐந்து கழக வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளார்கள்.

கம்பம்

முதலாவது வட்டாரத்தில் தி. மு. கழக ஆதரவு பெற்ற தோழர் பி. சாகுல் அமீது, 5-வது வட்டத்தில் தி. மு. க. புகழ் கே. தங்கராசு, 9-வது வட்டத்தில் தி. மு. கழக ஆதரவு பெற்ற தோழர் பி. சுப்பையா, 10-வது வட்டத்தில் தி. மு. கழக வேட்பாளர் டி. மாயன் ஆகியோர் வெற்றி பெற்றுள்ளனர்.

ஆரணி

தி. மு. க.	11
காங்கிரசு	6
சுயேச்சை	8

நாகை

தி. மு. க.	6
காங்கிரசு	12
முஸ்லிம் லீக்	1
கம்யூனிஸ்ட்	8

திருவாரூர்

தி. மு. க.	1
சுயேட்சை	12

சின்னச்சாமியின் குடும்பத்தாருக்கு புரட்சிநடிகர் எம். ஜி. ஆர். ரூ. 5000 நிதி உதவி

—(—)—

தியாகச்செம்மல் சின்னச்சாமி குடும்பத்திற்கு புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.சி. அவர்கள் சார்பில் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. அவர்களிடம் ரூ. 5000 எம். ஜி. ஆர். பிக்சர்ஸ் நிருவாகி வீரப்பன் அளித்தார்.

ஆதிக்க வெறியர்களால் திணிக்கப்படும் இந்தி மொழியை எதிர்க்கவும், அன்னை மொழியாம் செந்தமிழைக் காக்கவும் செந்தணலில் தன்னைத்தானே எரித்துக்கொண்ட சிங்கத்தமிழன் சின்னச்சாமியின் உருவப் படத்தை திருச்சி தேவர் மன்றத்தில் கழகப் பொருளாளர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. திறந்துவைத்தார்..

அதுபோது பொருளாளரிடம் புரட்சி நடிகர் சார்பில் ரூ. 5000 சின்னச்சாமி குடும்பத்திற்கு நிதி உதவி அளிக்கப்பட்டது.



ஆசிரியர், வெளியிடுபவர், என். வி. நடராசன், அச்சிடுபவர், புவனேசுவரி-நடராசன்—சோமு அச்சகம், 16, இப்ராகிம் சேட் தெரு, சென்னை-1